ஆணையர் அலுவலகம்,
இந்து சமய அறநிலையத்துறை,
சென்னை–34.

*செய்தி வெளியீடு எண்.844* **நாள் 9.10.2008**

சென்னை, கலைஞர் கருணாநிதி நகர், அருள்மிகு சக்தி விநாயகர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகையில் உள்ள இப்பகுதியில் பிரசித்திப்பெற்ற அருள்மிகு விநாயகர் திருக்கோயிலாகும். இந்தத் திருக்கோயிலில் நாள் தோறும் அன்னதானத்திட்டம் நடைபெறுகிறது. வாரம் தோறும் ஆன்மீக ஒழுக்க நெறி வகுப்புகளும் நடைபெற்று வருகிறது. பெரியபுராணம் தொடர் சொற்பொழிவு வாரந் தவறாது வெள்ளிக்கிழமைகளில் நடந்து வருகிறது. இவ்வாறு சொற்பொழிவு மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு மட்டுமே இதுவரை சொற்பொழிவு மண்டபம் இருந்து வந்தது. அன்னதானத்திற்கு என்று ஒரு தனி கூடம் இல்லாமல் இருந்தது. இக்குறையை போக்கவும் ஆலயத்தின் பல்வேறு பயன்பாடுகள் கருதியும் புதிதாக அன்னதான மண்டபம் கட்ட மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் அறிவுரையின் பேரில் திட்டமிடப்பட்டது. அதன்படி தற்போது திருக்கோயிலில் சொற்பொழிவு மண்டபத்தின் மேல் தளத்தில் 2400 சதுர அடியில் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அன்னதான மண்டபம் இன்று 9.10.2008 விஜயதசமித் திருநாளில் பிற்பகல் 5.00 மணி அளவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு கே.ஆர். பெரியகருப்பன் அவர்களால் விழாப் பேருரை ஆற்றி திறந்து வைக்கப்பட்டது. புதிதாக திறந்து வைக்கப்பட்ட அன்னதானக் கூடத்தின் கட்டுமான மதிப்பு ரூபாய் 7.40 இலட்சத்தில், ஆணையர் பொதுநலநிதி ரூ.4 இலட்சமும் திருக்கோயில் நிதி ரூ.3.40 இலட்சமும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்த விழாவில் தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசுச் செயலர், திரு க.முத்துசாமி இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் திரு த.பிச்சாண்டி இ.ஆ.ப., தியாகராயநகர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், திரு ஜெ.அன்பழகன், சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர் திரு க.தனசேகரன் மற்றும் ஆன்றோர்கள், சான்றோர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

*வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.*